கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட

முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



சிவகங்கை வடக்கு ஒன்றியம்,
சிவகங்கை மாவட்டம்.



குருவிகுளம் தெற்கு ஒன்றியம்,
தென்காசி வடக்கு மாவட்டம்.



ஆத்தூர் மேற்கு ஒன்றியம்,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.



விழுப்புரம் மேற்கு நகரம்,
விழுப்புரம் மத்திய மாவட்டம்.



பவானிசாகர் பேரூர்,
ஈரோடு வடக்கு மாவட்டம்.



ஜெயங்கொண்டம் கிழக்கு ஒன்றியம்,
அரியலூர் மாவட்டம்.



கொங்கணாபுரம் பேரூர்,
சேலம் மேற்கு மாவட்டம்.



திருக்கழுக்குன்றம் தெற்கு ஒன்றியம்,
காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்.



மண்ணச்சநல்லூர் மேற்கு ஒன்றியம்,
திருச்சி வடக்கு மாவட்டம்.

---

### தி.மு.க. தலைவராக எட்டாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும்

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - சமத்துவ மக்கள் கழகம் வாழ்த்து!

### எர்ணாவூர் ஏ.நாராயணன் அறிக்கை!

சென்னை,ஆக.29

சமத்துவ மக்கள் கழகத் தலைவர் எர்ணாவூர் ஏ.நாராயணன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949 செப்டம்பரில் தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு பின், அந்த உன்னதமான திராவிட இயக்கத்தின் தலைவராக



மாண்புமிகு தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்று, அரிய சாதனைகளை நிகழ்த்தி இன்று எட்டாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிற, இந்திய பிரபஞ்சம் போற்றும் நமது முதலமைச்சர் அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக, இமாலய சாதனைகளை நிறைவேற்ற, இயற்கைத் தாய் அருள் வழங்கிட மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



முப்பெரும் விழாவை முன்னிட்டு, முன்னாள் அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினரும், பகுதி கழகச் செயலாளருமான சோ.மா. இராமச்சந்திரன் அவர்களுக்கு, 'கலைஞர் விருது' வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்துள்ளார். அதனைத் தொடர்ந்து, அவருக்குப் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவிக்கும் விதமாக, சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் சிற்றரசு, அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், பகுதி கழகச் செயலாளர்கள் என். ராமலிங்கம், ச. பரமசிவம், மாநில தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் கார்த்திக் மோகன் ஆகியோருடன், வட்டக் கழகச் செயலாளர்களான ஏகாம்பரம், கு.பாபு, க. கோவிந்தராஜ், சி.வி.திருமலை, பி.சந்திரசேகர், எம்.ஜி.ரவிக்குமார், பி.ஜெயசங்கர், அருள் கண்ணன், ந. அதியமான், ரா.பொன்னரங்கம், ஆர்.ரவிந்திரகுமார், தெ.கருணாநிதி, வி.எம்.சிவா, வே.சண்முகம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அவரை நேரில் சந்தித்து, வாழ்த்து தெரிவித்தனர்.

---

### செஞ்சி கிழக்கு ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில்

## முதல்வர் பிறந்தநாள் கிரிக்கெட் போட்டி - ரூ.25 ஆயிரம் பரிசு - கோப்பை!

### மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

செஞ்சி,ஆக.29-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றிய திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் கிரிக்கெட் விளையாட்டு போட்டிகள் செஞ்சி கிழக்கு ஒன்றியம் அப்பம்பட்டில் நடைபெற்றது.

செஞ்சி கிழக்கு ஒன்றிய தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் முகமது அர்ஷத் ஏற்பாட்டில்

விழுப்புரம் வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் சந்திரன் தலைமையில் நடைபெற்ற கிரிக்கெட் விளையாட்டு போட்டிகளை செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான் தொடங்கி வைத்தார்.

5 நாட்கள் நடைபெற்ற கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிகளில் செஞ்சி எம் ஜி ஆர் நகர், வளத்தி, கீழ் பெண்ணாத்தூர், தேவதானம் பேட்டை, நேமூர், வல்லம், நாடார் மங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 32 அணிகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பங்கேற்று விளையாடினர்.

இதைத் தொடர்ந்து விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் மூன்று அணிகளுக்கு பரிசுகள் வழங்கும் நிகழ்ச்சி அப்பம்பட்டில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். செஞ்சி கிழக்கு ஒன்றிய திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் முகமது அர்ஷத் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு முதலிடம் பிடித்த செஞ்சி எம்ஜிஆர் நகர் அணிகளைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்களுக்கு ரூபாய் 15,000 மற்றும் கோப்பைகளையும், இரண்டாம் இடம் பிடித்த வளத்தி அணியினருக்கு ரூபாய் 10 ஆயிரம் மற்றும் கோப்பைகளையும், மூன்றாம் இடம் பிடித்த கீழ் பெண்ணாத்தூர் அணியினருக்கு ரூபாய் 4000 கோப்பையினையும், சிறந்த வீரருக்கான பரிசு கோப்பை களையும் அவர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் மனிதநேய மக்கள் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் சையத் உஸ்மான், ஒன்றிய பொருளாளர் இக்பால், முன்னாள் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணிதுணை அமைப்பாளர் ரிஸ்வான், மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

### தி.மு.க. தலைவராக எட்டாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும்

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு - வைகோ வாழ்த்து!

### "இமாலய சாதனைகளை நிறைவேற்ற இயற்கைத்தாய் அருள் வழங்கிட வேண்டும்!"

**சென்னை, ஆக.29-**

**தி.மு.க. தலைவராக எட்டாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

அவரது வாழ்த்துச் செய்தி வருமாறு:-

பேரறிஞர் அண்ணா அவர்களால் 1949 செப்டம்பரில் தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்க



ளுக்குப் பின், அந்த உன்னதமான திராவிட இயக்கத்தின் தலைவராக ஆருயிர்ச் சகோதரர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்று, அரிய சாதனைகளை நிகழ்த்தி இன்று எட்டாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கிற, இந்திய உபகண்டம் போற்றும் நமது முதலமைச்சர் அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக, இமாலய சாதனைகளை நிறைவேற்ற, இயற்கைத் தாய் அருள் வழங்கிட மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அவர், தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–11, வார்டு–153, போரூர், ராமகிருஷ்ணா நகர் அரிவரசன் சாலையில் சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் மூலம் ரூ.90 இலட்சம் 57 ஆயிரம் மதிப்பீட்டில் விளையாட்டுத் திடலில் உள் விளையாட்டு அரங்கம் (இறகுப்பந்து) கட்டும் பணிக்கு நேற்று 28.08.2025 மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மண்டலம்–11, மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், எம்.சி., பகுதி கழக துணை செயலாளர் இரா.பால்பாண்டியன், வட்ட செயலாளர் தி.சார்லஸ், மாமன்ற உறுப்பினர் சாந்தி ராமலிங்கம்.எம்.சி., மாவட்ட பிரதிநிதி கோ.இராமலிங்கம் மற்றும் கழக நிர்வாகிகள், அரசுத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.